Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

# தமிழ் மக்கள் குரல்

tamilmakkalkurall@gmail.com

தினசரி காலை நாளிதழ்

RNI No. : TNTAM24840

உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | புதன்கிழமை, ஆகஸ்ட் 21, 2024 | இதழ் 130

# ரூ.17,616 கோடியில் 19 தொழிற்சாலைகள் திறப்பு; 1 லட்சத்து 7 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு ரூ.51,157 கோடியில் 28 தொழிற்சாலைகளுக்கு முதல்வர் ஸ்டாலின் அடிக்கல் 'தமிழகத்தில் நிம்மதியாக தொழில் நடத்தலாம் என்ற நம்பிக்கை தொழில் அதிபர்களுக்கு வந்துள்ளது' என பேச்சு

சென்னை, 21 ஆகஸ்ட் 2024: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை சார்பில் சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ரூ.17,616 கோடி முதலீட்டில் 64,968 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய 19 தொழில் திட்டங்களைத் தொடங்கி வைத்தார்.

ரூ.51,157 கோடி முதலீட்டில் 41,835 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய 28 தொழில் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

கடந்த மூன்று ஆண்டுகளில் சுமார் 31 லட்சம் நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பினை உருவாக்கும் வகையில் ரூ.9.74 இலட்சம் கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன. இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாக விளங்கி வரும் தமிழ்நாட்டினை, 2030-ஆம் ஆண்டிற்குள் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக உயர்த்திட வேண்டும் என்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இலக்கினை விரைவில் அடைவதற்காக தமிழ்நாடு அரசின் தொழில் துறை பல்வேறு முன்னெடுப்புகளை எடுத்து வருகிறது.

அந்த வகையில், தொழில் துறை சார்பில் சென்னையில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், முதலமைச்சர் மொத்தம் 1,06,803 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய வகையில் ரூ.17,616 கோடி முதலீட்டிலான 19 தொழில் திட்டங்களை தொடங்கி வைத்து, ரூ.51,157 கோடி முதலீட்டிலான 28 புதிய தொழில் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

திருவள்ளூர், காஞ்சிபுரம், சென்னை, செங்கல்பட்டு, கிருஷ்ணகிரி, விழுப்புரம், விருதுநகர், ராணிப்பேட்டை, ஈரோடு, திருப்பூர், திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் ஓம்ரான், சுந்தரம் பாஸ்னர்ஸ், ராயல் என்பீல்டு உட்பட பல்வேறு முன்னணி நிறுவனங்கள் அமைத்துள்ள தொழிற்சாலையை முதலமைச்சர் இன்று துவக்கி வைத்தார்.

அதேபோன்று தூத்துக்குடி, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் ரூ.51 ஆயிரத்து 157 கோடி முதலீட்டில் 28 தொழிற்சாலைகளுக்கு முதல்வர் அடிக்கல் நாட்டினார்.




இந்த நிகழ்ச்சியில் முதலமைச்சர் பேசியதாவது: கடந்த ஜனவரி மாதம் உலக முதலீட்டாளர் மாநாட்டை நடத்தியிருக்கிறோம். அந்த மாநாடு மூலமாக நாம் மேற்கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் எண்ணிக்கை - 631. ஈர்க்கப்பட்ட முதலீடுகளின் மதிப்பு 6.64 லட்சம் கோடி ரூபாய். இதன் மூலமாக 14 லட்சம் பேருக்கு நேரடியாகவும், 12 லட்சம் பேருக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு கிடைக்கும்.

மொத்தமாக சொல்லவேண்டும் என்றால், கடந்த மூன்று ஆண்டுகளில், 31 லட்சம் பேருக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பை உருவாக்கும் வகையில், 9 லட்சத்து 74 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடுகளை ஈர்த்திருக்கிறோம்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் போடுவதோடு நம்முடைய கடமை முடிந்துவிட்டது என்று இருந்துவிடாமல், அந்தத் தொழில்களை நிறுவுவதற்கு தேவையான ஆதரவு சேவைகளை அளித்துக் கொண்டு வருகின்றோம். அதன் முன்னேற்றத்தையும் தொடர்ந்து கண்காணித்து, அந்தத் திட்டங்கள் விரைந்து செயலாக்கப்படுவதை நம்முடைய அரசு உறுதி செய்து கொண்டிருக்கிறது. தொழில் வளர்கிறது என்றால், அந்த நிறுவனம் மூலமாக, மாநிலம் வளர்கிறது; கிடைக்கும் வேலைவாய்ப்புகள் மூலமாக குடும்பங்களும் வளர்கிறது; வாழ்கிறது! அந்த வகையில், வளர்ச்சியின் அடையாளமாக தொழில் நிறுவனங்கள் இருக்கிறது.

அமைதியான, சட்டம் ஒழுங்கு சிறப்பாக இருக்கும் மாநிலத்தை தேடித்தான் தொழில்துறையினர் வருவார்கள் என்பது உங்கள் எல்லோருக்கும் தெரியும்.

தமிழ்நாட்டில் நிம்மதியாக தொழில் நிறுவனத்தை நடத்தலாம் என்ற நம்பிக்கை தொழிலதிபர்களுக்கு வந்திருக்கிறது. அதன் அடையாளமாகத்தான், ஏராளமான தொழிற்சாலைகள் கடந்த மூன்றாண்டுகளாக தமிழ்நாட்டில் உருவாகி வருகிறது.

உங்களுக்கு என் அன்பான வேண்டுகோள் என்னவென்றால், நீங்கள் தொழில் நிறுவனங்களை தொடங்கினால் மட்டும் போதாது; உங்களைப் போன்று இருக்கின்ற மற்ற தொழில் நிறுவனங்களையும் தமிழ்நாட்டிற்கு அழைத்து வாருங்கள்ஞ் தொழில் தொடங்க வையுங்கள்.

தமிழ்நாடு அரசின் தொழில்துறை தூதுவர்களாக நீங்கள் எல்லோரும் மாற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்று, இந்த மூன்று ஆண்டுகளில், எண்ணற்ற தொழில் திட்டங்களை தமிழ்நாடு ஈர்த்திருக்கிறது. அதிக முதலீடுகளை ஈர்க்கும் உயர் தொழில்நுட்பம் வாய்ந்த தொழில்களையும், அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கும் தொழில்களையும் ஈர்த்து, அதன்மூலமாக, 2030 ம் ஆண்டிற்குள் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக மாற்ற வேண்டும் என்ற தமிழ்நாட்டின் இலக்கை அடைவதற்காக நம்முடைய அரசு முனைப்போடு செயலாற்றி வருகிறது.

இந்த இருமுனை முயற்சி, இப்போது சாதகமான பலன்களை தந்து வருகிறது. இன்றைய தினம் பல்வேறு வகையான திட்டங்களை தொடங்கி வைத்திருக்கிறேன்.

மோட்டார் வாகனங்கள், பொது உற்பத்தி, தொழிற் பூங்காக்கள், மின்னணுவியல், மருத்துவ உபகரணங்கள்,

தகவல் தொழில் நுட்பம், தகவல் தொழில் நுட்பச் சேவைகள், உணவு பதப்படுத்துதல், ரசாயனங்கள், ஜவுளி மற்றும் ஆடைகள், உயிர் அறிவியல், பசுமை ஹைட்ரஜன், கட்டுமானப் பொருட்கள் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்கள் இன்றைக்கு தொடங்கப்பட்டிருக்கிறது. இதன்மூலம் 1 லட்சத்து 6 ஆயிரத்து 803 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் அளிக்கப்பட இருக்கிறது. இதில் சிறப்பம்சம் என்னவென்றால், இதில் பெருமளவிலான வேலைவாய்ப்புகள் பெண்களுக்கானவை.

பெண்கள் முன்னேற்றத்திற்கு முக்கியத்துவம் அளித்து வருகின்ற நம்முடைய அரசின் நடவடிக்கைகளுக்கு இந்த சாதனை மேலும் ஊக்கமளிக்கிறது.

அனைத்துத் துறை வளர்ச்சி; அனைத்து சமூக வளர்ச்சி; அனைத்து மாவட்ட வளர்ச்சி; என்று நான் சொல்லி வருவதன் அடையாளம் இவைதான்.

தமிழ்நாடு முழுவதும் பரவலான மற்றும் நிலைக்கத்தக்க வளர்ச்சியை உறுதி செய்வதில் நம்முடைய அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது. மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் தொழில் திட்டங்கள் தொடங்கப்படுவதால், அந்த மாவட்டங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படுகிறது.

திறன் மிகு தொழிலாளர்கள் உள்ள மாநிலம், இந்தியாவிலேயே அதிக எண்ணிக்கையில் பெண் தொழிலாளர்கள் கொண்ட மாநிலம் என்று பல்வேறு சிறப்பம்சங்களை தமிழ்நாடு கொண்டிருக்கிறது. மாநிலத்தில் பெண்களின் கல்வியறிவும், வேலைவாய்ப்பு விகிதமும், நாட்டின் சராசரியைவிட அதிகமாக இருக்கிறது. நாட்டிலேயே பெண்களுக்கான மிகவும் பாதுகாப்பான மாநிலம் தமிழ்நாடு என்று உலகம் முழுவதும் தெரியும்.

உட்கட்டமைப்பு தொடர்பான தொழில் துறை வளர்ச்சி, வணிகம் செய்வதை எளிதாக்குவது, சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் வாழ்க்கை வசதிகளை எளிதாக்குவது, இவையெல்லாம் அரசின் குறிக்கோள்கள். இதை செயல்படுத்துவதற்காகதான் எங்களுடைய கடமையாக கருதுகிறோம்.

உலகம் எங்கும் இருக்கும் முதலீட்டாளர்கள் விருப்பத்தோடு தேர்வு செய்யும் மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது என்பதற்கு இன்றைய நிகழ்வே ஒரு எடுத்துக்காட்டு.

130-க்கும் மேற்பட்ட 'ஃபார்ச்சூன் 500' நிறுவனங்கள் தமிழ்நாட்டை தேர்ந்தெடுத்துள்ளதும், தமிழ்நாட்டின் முதலீட்டு ஈர்ப்புத் திறனுக்கு அத்தாட்சியாக விளங்குகிறது.

மிகுந்த திறமையும், படைப்பாற்றலும் கொண்டவர்கள், தமிழ்நாட்டின் துடிப்பான இளைஞர்கள் நம்முடைய இளைஞர்கள். இந்தியாவில் மட்டுமல்ல, உலகம் முழுவதும் பல்வேறு துறைகளில், பல்வேறு வகைகளில் சிறப்பாக பணிபுரிந்து வருகிறார்கள். எனவே, எங்கள் இளைஞர்களின் திறன்களை நன்றாக பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று முதலீட்டாளர்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய தினம் துவக்கி வைக்கப்பட்ட மற்றும் அடிக்கல் நாட்டப்பட்ட அனைத்துத் திட்டங்களுக்கும் தமிழ்நாடு அரசின் சார்பாக என்னுடைய வாழ்த்துகளை தெரிவிப்பதோடு, ஒவ்வொரு திட்டத்தின் சுமுகமான செயல்பாட்டுக்கும் சாதகமான சூழலை உருவாக்குவதில் தமிழ்நாடு அரசு மனப்பூர்வமான ஆதரவளிக்கும் என்று உறுதியளிக்கிறேன். இவ்வாறு மு.க.ஸ்டாலின் பேசினார்.

இந்த விழாவில் தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் முருகானந்தம், செயின்ட் கோபைன் நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலர் சந்தானம், ஓம்ரான் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டகுடோ இவானகா, சி.ஐ.ஐ. தமிழ்நாடு தலைவர் ஸ்ரீவட்ஸ்ராம், செம்ப்கார்ப் நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலர் விபுல் துலி, கிரீன்கோ குழுமத்தின் தலைவர் மகேஷ், தொழில் துறை செயலாளர் அருண் ராய், மேலாண்மை இயக்குநர்கள் சந்தீப் நந்தூரி, விஷ்ணு, பல்வேறு தொழில் நிறுவனங்களைச் சார்ந்திருக்கக்கூடிய நிர்வாகிகள், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.




PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்விசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

தமிழ் குரல் மக்கள்
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

புதன்கிழமை,
ஆகஸ்ட் 21, 2024

# முதியோர்களின் நலவாழ்விற்காக பெருநகர சென்னை காவல்துறையின் “காவல் கரங்கள்” திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கும் அதுல்யா சீனியர் கேர்



சென்னை, 21 ஆகஸ்ட் 2024: மூத்தகுடிமக்களின் நலவாழ்வு மேலும் மேம்படுத்த வேண்டுமென்ற இலக்கை நோக்கிய ஒரு முன்னேற்ற நடவடிக்கையாக, பெருநகர சென்னை காவல்துறையின் சிறப்பான “காவல் கரங்கள்” திட்டத்தோடு அதுல்யா சீனியர் கேர் பெருமிதத்துடன் கைகோர்த்து செயல்படுகிறது. குடும்பத்தினரால் கைவிடப்பட்ட நபர்கள் மற்றும் கவனிப்பின்றி விடப்பட்டிருக்கும் முதியோர்களுக்கு ஒருங்கிணைக்கப்பட்ட மருத்துவம் தொடர்பான சேவைகளை வழங்குவது இந்த உன்னதமான முன்னெடுப்பு முயற்சியின் நோக்கமாகும். வசதியற்ற ஏழை, எளிய மக்களுக்கும், முதியோர்களுக்கும் விரிவான சிகிச்சை பராமரிப்பை வழங்குவதற்கு பல நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளின் ஒருங்கிணைந்த முயற்சிகளை இந்த முன்னெடுப்பு திட்டம் சிறப்பாக பயன்படுத்துகிறது. சென்னை பெருநகர காவல்துறை ஆணையர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் காவல்துறை கூடுதல் ஆணையர் திரு. கபில் குமார் சி சரத்கர் (ஐபிஎஸ்) மற்றும் அதுல்யா சீனியர் கேர் நிறுவனத்தின் பிரதிநிதிகளுடன் காவல்துறையின் பிற உயரதிகாரிகளும் கலந்து கொண்டனர். மூத்தகுடிமக்களுக்கான பராமரிப்பு மற்றும் சமூக நலவாழ்வு மீது சென்னை காவல்துறையுடன் அதுல்யா கொண்டிருக்கும் தொடர்ச்சியான அர்ப்பணிப்பு பயணத்தில் இது ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லாகும். “காவல் கரங்கள்” செயல்திட்டத்தின் திறன்களை கணிசமாக உயர்த்தும் நோக்கத்தோடு அனைத்து வசதிகளையும் கொண்ட ஒரு அவசரநிலை சிகிச்சை ஊர்தியை (ஆம்புலன்ஸ்) அதுல்யா சீனியர் கேர் தனது பங்களிப்பாக வழங்கியிருக்கிறது. ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட முதியோர்களுக்கு உடனடி மருத்துவ கவனிப்பை வழங்கி அவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கான மையங்களுக்கு அழைத்துச் செல்கிற மீட்பு நடவடிக்கைகளில் இந்த பிரத்யேக ஆம்புலன்ஸ் முக்கிய பங்காற்றும். சாலை ஓரங்களிலும் மற்றும் பிற இடங்களிலிருந்தும் மீட்கப்படுகிற முதியோர்கள், நோய்வாய்ப்பட்டவர்கள், மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்படும் பயணத்தின்போதே சாத்தியமுள்ள சிறந்த சிகிச்சை கவனிப்பை பெறுவதை உறுதி செய்யும் வகையில் அனைத்து நவீன மருத்துவ சாதனங்களும் இந்த ஆம்புலன்ஸ்-ல் நிறுவப்பட்டுள்ளன. அதுல்யா சீனியர் கேர்-ன் நிறுவனர் மற்றும் தலைமை செயல் அலுவலரான திரு. ஜி ஸ்ரீனிவாசன், சமூக நலனுக்கான இந்த ஒத்துழைப்பு திட்டம் குறித்து தனது எண்ணங்களை பகிர்ந்து கொள்கையில், “நமது மூத்தகுடிமக்களின் வாழ்க்கைத் தரத்தை மேலும் சிறப்பாக்கும் குறிக்கோள் மீது அதுல்யாவில் நாங்கள் எப்போதும் உறுதியான அர்ப்பணிப்பைக் கொண்டிருக்கிறோம். “காவல் கரங்கள்” திட்டத்தோடு கைகோர்த்து செயல்படுவது எங்களுக்கு மகிழ்ச்சியளிக்கிறது. ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட முதியோர்கள், அவர்கள் பெறுவதற்கான சிகிச்சை பராமரிப்பையும், கவனிப்பையும் பெறுவதை உறுதி செய்யும் வகையில் எமது சேவை பரப்பையும் மற்றும் தாக்கத்தையும் மேலும் விரிவுபடுத்த இந்த ஒத்துழைப்பு எங்களுக்கு உதவுகிறது. இந்த உன்னதமான நோக்கத்திற்காக ஒரு ஆம்புலன்ஸ் வாகனத்தை வழங்குவதை ஒரு கவுரவமாக நாங்கள் கருதுகிறோம். இந்த முனைப்பு திட்டத்திற்கு மனமார்ந்த ஆதரவை தொடர்ந்து வழங்குவதை நாங்கள் ஆவலோடு எதிர்நோக்குகிறோம். நமது முதியோர்களுக்கு அதிக பாதுகாப்பான, அதிக கனிவும், பரிவும் கலந்த சூழலை உருவாக்குவது எமது இலக்காகும். அந்த குறிக்கோள் இலக்கை நோக்கிய பயணத்தில் மாநகர காவல்துறையுடன் மேற்கொள்ளப்படும் இக்கூட்டாண்மை ஒரு முக்கிய முன்னேற்ற நடவடிக்கையாகும்” என்று கூறினார்.

அதுல்யா சீனியர் கேர் மற்றும் பெருநகர சென்னை காவல்துறையின் ஒரு முன்னெடுப்பான “காவல் கரங்கள்” திட்டத்திற்கு இடையிலான ஒத்துழைப்பு, இதன் திறன் மேம்பாட்டில் ஒரு முக்கியமான முன்னேற்றமாகும்; தேவையிலுள்ள அதிக எண்ணிக்கையிலான நபர்களை சென்றடையவும் மற்றும் அவர்களுக்கு உதவவும் இது உதவும். வயதில் முதிர்ந்த நபர்களுக்கு உடல்சார்ந்த, உணர்வு சார்ந்த மற்றும் சமூகம் சார்ந்த நலவாழ்வு தேவைகளை பூர்த்தி செய்வதற்கென பல்வேறு வசதிகளை வழங்கிவரும் அதுல்யா சீனியர் கேர், மூத்தகுடிமக்களுக்கான பராமரிப்பு சேவைகள் வழங்குவதில் தொடர்ந்து முதன்மை வகிக்கிறது. இந்த கூட்டாண்மை நடவடிக்கையின் வழியாக சமூக பொறுப்புறுதி மற்றும் சமுதாய நலவாழ்வின் மீதான தனது அர்ப்பணிப்பையும், வாக்குறுதியையும் அதுல்யா மீண்டும் வலுப்படுத்தியிருக்கிறது. வயது முதிர்ந்த ஒவ்வொரு நபரும் கண்ணியத்தோடும், மரியாதையோடும் நடத்தப்படுகிற ஒரு உலகை உருவாக்குவதில் இந்நிறுவனம் நம்பிக்கை கொண்டிருக்கிறது. இந்த நம்பிக்கையை நிஜமாக்குவதற்கான செயல்திட்டத்தில் இந்த ஒத்துழைப்பு ஒரு முன்னேற்ற நடவடிக்கையாகும். அதுல்யா சீனியர் கேர் மற்றும் சென்னை காவல் துறையின் “காவல் கரங்கள்” என்பதற்கும் இடையிலான இக்கூட்டாண்மை, பிற பெருநிறுவனங்களுள் பின்பற்றுவதற்கான ஒரு சிறந்த எடுத்துக்காட்டை நிறுவியிருக்கிறது. சமூக பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் நிறுவனங்கள் மற்றும் சமூக உறுப்பினர்களின் ஈடுபாடு மற்றும் ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை இது வலியுறுத்துகிறது. ஆதரவற்ற, நோய்வாய்ப்பட்ட மூத்தகுடிமக்களின் வாழ்க்கையில் ஒரு அர்த்தமுள்ள மாற்றத்தை உருவாக்க பெருநகர சென்னை காவல்துறையோடும் மற்றும் பிற கூட்டாளிகளோடும் இனிவரும் காலங்களிலும் தொடர்ந்து செயல்படுவதை அதுல்யா சீனியர் கேர் ஆவலுடன் எதிர்நோக்குகிறது.

# தங்கம் விலை இன்று சவரனுக்கு ரூ.400 உயர்வு



சென்னை, 21 ஆகஸ்ட் 2024: சென்னையில் இன்று 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.400 உயர்ந்து ஒரு சவரன் ரூ.53 ஆயிரத்து 680-க்கு விற்பனையாகிறது.

தங்கம் விலை கடந்த மாதம் கிடுகிடுவென அதிகரித்து ஒரு சவரன் ரூ.55 ஆயிரத்தை கடந்தது. இந்த நிலையில், நடப்பு ஆண்டுக்கான மத்திய பட்ஜெட் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

அதில் தங்கம், வெள்ளிக்கு இறக்குமதி வரி 15 சதவீதத்திலிருந்து 6 சதவீதமாகவும், பிளாட்டினத்திற்கான இறக்குமதி வரி 12 சதவீதத்தில் இருந்து 6.4 சதவீதமாகவும் குறைக்கப்படும் என மத்திய நிதி அமைச்சர் அறிவித்தார். பட்ஜெட் எதிரொலியாக கடந்த சில நாட்களாக தங்கம் விலை தொடர்ந்து சரிந்து வந்தது. இதனால், நகை பிரியர்கள் மகிழ்ச்சி அடைந்தனர். இதையடுத்து நேற்று தங்கம் விலை சவரனுக்கு ரூ.80 குறைந்து ரூ.53,280-க்கு விற்று வந்த நிலையில், இன்று சற்று உயர்ந்துள்ளது.

சென்னையில் இன்று 22 கேரட் தங்கம் விலை கிராமுக்கு ரூ.50 உயர்ந்து ஒரு கிராம் ரூ.6,710-க்கும், சவரனுக்கு ரூ.400 உயர்ந்து ஒரு சவரன் ரூ.53,680-க்கும் விற்பனை செய்யப்படுகிறது. கடந்த 10 நாட்களுக்கும் மேலாகவே தங்கம் விலை தொடர்ந்து ஏற்றம் கண்டு வருகிறது. வெள்ளி விலை மாற்றமின்றி ஒரு கிராம் ரூ.92-க்கு விற்பனையாகிறது. ஒரு கிலோ வெள்ளி ரூ.92 ஆயிரத்துக்கும் விற்பனை செய்யப்படுகிறது.

ஆடி முடிந்து ஆவணி பிறந்துவிட்டதால் திருமணம் உள்ளிட்ட சுப காரியங்களுக்காக தங்கம் வாங்கும் போக்கு அதிகரிக்கும் சூழலில் தங்கம் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது.

# 2 நாள் பயணமாக போலந்து புறப்பட்டார் பிரதமர் மோடி உக்ரைனுக்கு ரெயிலில் பயணிக்கிறார்



சென்னை, 21 ஆகஸ்ட் 2024: போலந்தில் இருந்து உக்ரைனுக்கு பிரதமர் மோடி ரெயிலில் பயணம் செய்ய உள்ளார்.

மோடி அரசு முறை பயணமாக இன்று (21 ந் தேதி) காலை டெல்லயிலிருந்து போலந்து கிளம்பிச் சென்றார். அங்கு அந்நாட்டு அதிபர், பிரதமர் ஆகியோரை சந்திக்கும் அவர், இந்திய வம்சாவளியினர் மத்தியில் உரையாற்றுகிறார்.

சுமார் 45 வருடங்களுக்கு முன் இந்திய பிரதமர் மொரார்ஜி தேசாய் போலந்து சென்றிருந்தார். அதன்பின் போலந்து செல்லும் முதல் பிரதமர் மோடி என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த பயணம் தொடர்பாக எக்ஸ் ' சமூக வலைதளத்தில் பிரதமர் மோடி வெளியிட்டு உள்ளதாவது:

வார்சா கிளம்பி செல்கிறேன். இரு நாடுகளுக்கு இடையே தூதரக உறவு ஏற்பட்டு 70 ஆண்டுகள் நிறைவு பெற்றதை கொண்டாடும் நேரத்தில் இந்த பயணம் சிறப்பு வாய்ந்ததாக அமைகிறது. போலந்துடனான ஆழமான நட்புறவை இந்தியா கொண்டாடி வருகிறது. ஜனநாயம் மற்றும் பன்முகத்தன்மை மேலும் வலுப்பெறும்.

இவ்வறு அவர் கூறியுள்ளார்.

போலந்து பயணத்தை முடித்து கொண்டு பிரதமர் மோடி உக்ரைன் செல்ல உள்ளார். கடந்த 30 ஆண்டுகளில் இந்திய பிரதமர் ஒருவர் அந்நாட்டிற்கு செல்வது இது முதல் முறையாகும். போலந்தில் இருந்து உக்ரைனுக்கு பிரதமர் மோடி ரெயில் மூலம் பயணம் மேற்கொள்கிறார். சுமார் 10 மணி நேர பயணத்திற்காக பாதுகாப்பு மற்றும் அதிநவீன வசதிகளுடன் கூடிய ரயில் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

ரெயிலில் பயணம் மேற்கொள்வோரை கவரும் வண்ணம் உட்புறம் வடிவமைக்கப்பட்டு உள்ளது. தலைவர்கள் தங்க அறைகள் பல வேலைப்பாடுகளுடன் மரத்தில் செய்யப்பட்டுள்ளது. முக்கிய ஆலோசனை நடத்த விசாலமான மேஜைகள், சொகுசாக சோபா மற்றும் டி.வி. பொருத்தப்பட்டுள்ளது. சுகமாக தூங்குவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

சுமார் 7 மணி நேரம் மட்டும் உக்ரைனில் இருக்கும் மோடி, அந்நாட்டு அதிபர் ஜெலன்ஸ்கியை சந்திக்க உள்ளார்.

உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தி வரும் நிலையில், பல விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. பல நாட்டு தலைவர்கள் ரெயில் மூலமே உக்ரைன் வருகின்றனர். அவர்களில் அமெரிக்க அதிபர் ஜோ பைடன், பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மேக்ரான், ஜெர்மன் சான்சிலர் ஓலப் ஸ்கால்ஜ் கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, பிரிட்டன் முன்னாள் பிரதமர் ரிஷி சுனக், இத்தாலி பிரதமர் ஜியார்ஜியா மெலோனி, ஜப்பான் பிரதமர் பிமியோ கிஷிடோ ஆகியோர் ரெயில் மூலம் உக்ரைன் பயணித்து உள்ளனர். உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கியும் வெளிநாடுகளுக்கு ரெயில் பயணத்தையே நம்பி உள்ளார். உக்ரைன் நாட்டின் பிரதமர் மற்றும் அதிபரை சந்தித்து பேசும் மோடி, வர்சாவில் இந்திய வம்சாவளியினர் மற்றும் தொழிலதிபர்களை சந்தித்து உரையாடுகிறார். போலந்து- இந்தியா தூதரக உறவின் 70 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில் மோடி பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது. பிரதமரின் இந்த பயணத்தின்போது, புவிசார் அரசியல் பிரச்சினைகள், வர்த்தகம் மற்றும் பாதுகாப்பு அம்சங்கள் குறித்து விவாதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

# ரூ. 105 கோடி மதிப்புள்ள ஆர்டரை புதுப்பிக்கத்தக்க ஆற்றல் பிரிவில் பெற்றிருக்கும் ஹைடெக்-பைப்ஸ் லிமிடெட்

சென்னை, 21 ஆகஸ்ட் 2024: இந்தியாவில் ஸ்டீல் டியூப்கள் மற்றும் குழாய்கள் உற்பத்தியில் முன்னணி நிறுவனங்களுள் ஒன்றாக இயங்கிவரும் ஹைடெக்-பைப்ஸ் லிமிடெட், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் துறையில் இயங்கும் முக்கிய வாடிக்கையாளர்களிடமிருந்து மொத்தத்தில் ரூ.105 கோடி (ஜிஎஸ்டி உட்பட) மதிப்புள்ள ஆர்டர்களை வெற்றிகரமாக பெற்றிருக்கும் செய்தியினை மகிழ்ச்சியுடன் அறிவித்திருக்கிறது. நிலைப்புத்தன்மையுள்ள ஆற்றல் தீர்வுகளுக்கு அதிகரித்துவரும் தேவையை இந்த கணிசமான ஒப்பந்த ஆர்டர்கள் பிரதிபலிக்கின்றன; முக்கியமான இத்துறைக்கு ஆதரவளிப்பதில் இந்நிறுவனம் கொண்டிருக்கும் பொறுப்புறுதியை இந்த ஆர்டர்கள் அடிக்கோடிட்டு காட்டுகின்றன. அடுத்த மூன்று மாதங்கள் காலஅளவின்போது சனந்த் யூனிட் மிமிஃபேஸ் மி-ல் அமைந்துள்ள இந்நிறுவனத்தின் புதிய மிக நவீன உற்பத்தி ஆலையிலிருந்து இந்த ஆர்டர்களுக்கான உற்பத்தி தயாரிக்கப்பட்டு சப்ளை செய்யப்படும். மிக நவீன தொழில்நுட்பம் மற்றும் திறன்மிக்க உற்பத்தி செயல்முறைகள் கொண்ட இப்புதிய ஆலை, புதுப்பிக்கத்தக்க ஆற்றல் துறையின் கடுமையான தரநிலைகளுக்கு இணக்கமான உயர்தர ஸ்டீல் பைப்களை தயாரித்து வழங்கும் திறன் கொண்டது. ஹைடெக்-பைப்ஸ் லிமிடெட்-ன் சேர்மன் திரு. அஜய் குமார் பன்சால் இது குறித்து கூறியதாவது: “நம் நாட்டில் ஒரு மிக முக்கியமான துறையாக வளர்ந்துவரும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் பிரிவிற்கு ஈ ஆர் டபிள்யூ ஸ்டீல் பைப்களை வழங்கும் நிறுவனமாக தேர்வு செய்யப்பட்டிருப்பது குறித்து நாங்கள் பெரும் உற்சாகமும், மகிழ்ச்சியும் கொள்கிறோம். எங்களது சனந்த் தொழிலகமானது எமது திறன்கள் மற்றும் நிலைப்புத்தன்மை மீதான எமது பொறுப்புறுதி ஆகிய இரு அம்சங்களிலும் ஒரு முக்கியமான முதலீடாக இருக்கிறது. எங்களுக்கு கிடைத்திருக்கும் இந்த ஒப்பந்தங்கள், எங்கள் மீது எமது வாடிக்கையாளர்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை வலுவாக நிரூபிக்கின்றன; அதுமட்டுமன்றி புதுப்பிக்கத்தக்க ஆற்றல் துறையில் உட்கட்டமைப்பை மேலும் மேம்படுத்துவதில் எமது சிறப்பான பங்களிப்பையும், பங்கையும் இது வலுவாக சுட்டிக்காட்டுகிறது.”

காற்றாலைகள், சோலார் மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் பிற பசுமை ஆற்றல் செயல்திட்டங்கள் உட்பட புதுப்பிக்கத்தக்க ஆற்றல் துறையில் பல்வேறு செயல் நடவடிக்கைகளுக்கு இந்த ஸ்டீல் பைக்கள் பயன்படுத்தப்படும். தொழில்துறையின் தரநிலைகளை பூர்த்தி செய்வது மட்டுமன்றி அவற்றை மிஞ்சிய இன்னும் சிறப்பான தரத்தில் தனது தயாரிப்புகளை வழங்குவதில் ஹைடெக் பைப்ஸ் அர்ப்பணிப்போடு இயங்கி வருகிறது. மிக கடுமையான சூழ்நிலைகளிலும்கூட சிறப்பான செயல்திறனையும், நிலைப்புத்தன்மையையும் வெளிப்படுத்துவதாக இதன் தயாரிப்புகள் இருக்கின்றன. “கிடைத்திருக்கும் இந்த புதிய ஆர்டர்களின் மூலம், ஸ்டீல் பைப்கள் உற்பத்தி தொழில்துறையில் முதன்மை நிறுவனம் என்ற எமது நிலையை நாங்கள் மேலும் வலுப்படுத்துவோம்; புதுப்பிக்கத்தக்க ஆற்றலுக்கு நமது நாடு மாறுகின்ற நிலையில் அத்துறையில் ஒரு முன்னணி நிறுவனமாக நாங்கள் செயல்படுவோம்” என்று திரு. அஜய் குமார் பன்சால் மேலும் கூறினார்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# சென்னை அண்ணா நகரில் உள்ள ரெயின்போ சில்ட்ரன்'ஸ் ஹாஸ்பிடல் இளம் பருவத்தினருக்கான உடல்நல சேவைகளை அறிமுகப்படுத்துகிறது



சென்னை, 21 ஆகஸ்ட் 2024: குழந்தைகள் நலப் பராமரிப்பில் ஒரு முன்னோடியாகத் திகழும் ரெயின்போ சில்ட்ரன்'ஸ் ஹாஸ்பிடல் இன் அண்ணாநகர் பிரிவில் "அடலசெண்ட்ஸ் கிளினிக்" திறக்கப்படுவதை அறிவிப்பதில் ரெயின்போ சில்ட்ரன்'ஸ் ஹாஸ்பிடல் மகிழ்ச்சி அடைகிறது. பதின்ம வயதிற்கு முந்தைய வயதினர் (10-12 வயது) மற்றும் பதின்ம வயதினர் (13-18 வயது) இருவரின் சிறப்புத் தேவைகளை மையமாகக் கொண்டு, இளம் பருவத்தினரின் உடல்நலம் மற்றும் நல்வாழ்வுக்கான இந்த மருத்துவமனையின் உறுதிப்பாட்டின் ஒரு குறிப்பிடத்தக்க விரிவாக்கத்தை இந்தத் திட்டம் பிரதிபலிக்கிறது.

அடலசெண்ட்ஸ் கிளினிக் க்கு தலைமை தாங்குகிற ரெயின்போ சில்ட்ரன்'ஸ் ஹாஸ்பிட்டல், அண்ணா நகர், மூத்த ஆலோசகர் குழந்தைகள் மருத்துவர் மற்றும் நியோனாட்டாலஜிஸ்ட் டாக்டர் நீரஜா பட்சா, எம் பி பி எஸ், எம் ஆர் சி பி சி எச் (லண்டன், கிளாஸ்கோ & எடின்பர்க்), கூறுகையில் "முழுமையான மற்றும் கல்வி அமர்வுகள் மூலம் உடல் மற்றும் அறிவுசார் நல்வாழ்வு ஆகிய இரண்டையும் குறித்த நிபுணர் வழிகாட்டுதலை வழங்குகின்ற வகையில் இளம் பருவ தடுப்பூசிகள், ஊட்டச்சத்து குறைபாடுகள் ஹார்மோன் மற்றும் பருவமடைதல் கோளாறுகள், இனப்பெருக்கம் மற்றும் பாலியல் ஆரோக்கியம், செல்போன் போன்ற சாதனங்களிலிருந்து விடுதலை, மது மற்றும் வஸ்துக்கள் துஷ்பிரயோகம், நடத்தை சுகாதார கவலைகளை நிர்வகித்தல், முதலியன அடங்கிய சேவைகளின் ஒரு பரந்த வரம்பை இந்த க்ளினிக் வழங்கும்" என்றார்.

இந்நிகழ்ச்சியில் ஒரு பிரபல நடிகரும் நகைச்சுவை நடிகருமான திரு. சதீஷ் முத்துக்கிருஷ்ணன் கலந்து கொண்டு, இளம் பருவத்தினரின் உடல் நலப் பிரச்சனைகளுக்கு சிகிச்சையளிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். இந்நிகழ்ச்சியில் பல பிரபலமான குழந்தைகள் மருத்துவ நிபுணர்கள் கலந்து கொண்டனர்.

இந்த அதிநவீன அடலசெண்ட்ஸ் கிளினிக் ஒவ்வொரு சனிக்கிழமையும் பிற்பகல் 2 மணி முதல் மாலை 4 மணி வரை நிபுணர் மருத்துவ சேவைகளை வழங்கும். அனுபவம் வாய்ந்த ஆலோசகர்களால் மேற்பார்வையிடப்படும் இந்தத் திட்டம், மருத்துவமனையின் பல்வேறு வகையான சிறப்பு குழந்தை மருத்துவம் மற்றும் மகப்பேறியல் சேவைகளுக்கு துணைபுரிவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

"ரெயின்போ சில்ட்ரன்'ஸ் ஹாஸ்பிடல் இளம் பருவத்தினரின் தேவைகளை நிவர்த்தி செய்யும் ஒரு பிரத்தியேக கிளினிக்கை அறிமுகப்படுத்துவதில் பெருமை கொள்கிறது, இதன் மூலம் இளைஞர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் அத்தியாவசிய அறிவு மற்றும் ஆதரவை வழங்குவதை நாங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளோம்" என்று ரெயின்போ சில்ட்ரன்'ஸ் ஹாஸ்பிடல் இன் மண்டலத் தலைவர் திரு. மணி மாறன் கூறினார்.

ரெயின்போ சில்ட்ரன்'ஸ் ஹாஸ்பிடல் இன் பிராந்திய மருத்துவ இயக்குநர் டாக்டர் அனுராதா பாஸ்கரன் கருத்துப்படி, "மொபைல் ஃபோனுக்கு அடிமையாதல், ஆரோக்கியமற்ற உணவுகளின் நுகர்வு மற்றும் போதைப்பொருள் துஷ்பிரயோகம் ஆகியவை இளம் பருவத்தினரிடம் பரவலாக உள்ளன, எனவே விரிவான, கல்வி, தடுப்பு மற்றும் மறுவாழ்வு பராமரிப்பு காலத்தின் தேவையாக இருக்கிறது. " என்று கூறினார்.

அடலசெண்ட்ஸ் கிளினிக் மற்றும் பிற சேவைகள் பற்றிய கூடுதல் தகவலுக்கு, அண்ணா நகரில் உள்ள ரெயின்போ சில்ட்ரன்'ஸ் ஹாஸ்பிடல் ஐப் பார்வையிடவும் அல்லது 1800 2122 என்ற எண்ணைத் தொடர்பு கொள்ளவும்.

# தேவையின்றி குண்டர் தடுப்பு சட்டத்தை பிரயோகிக்கக் கூடாது: தமிழக அரசுக்கு ஐகோர்ட் அறிவுறுத்தல்



சென்னை, 21 ஆகஸ்ட் 2024: தேவையின்றி குண்டர் தடுப்பு சட்டத்தை பிரயோகிக்கக் கூடாது' என, தமிழக அரசுக்கு, சென்னை ஐகோர்ட் அறிவுறுத்தி உள்ளது.

குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவதை எதிர்த்து, தாக்கல் செய்யப்படும் வழக்குகளை, நீதிபதிகள் எஸ்.எம்.சுப்ரமணியம், வி. சிவஞானம் அடங்கிய அமர்வு, தற்போது விசாரித்து வருகிறது. இந்நிலையில், குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ், காவலில் வைக்கும் உத்தரவை எதிர்த்த ஒரு வழக்கு, இந்த அமர்வில் விசாரணைக்கு வந்தது.

அப்போது, குண்டர் தடுப்பு சட்டத்தில் கைது செய்யப்பட்டவர்களுக்கு, இடைக்கால ஜாமின் வழங்குவது குறித்து, நீதிபதிகள் கேள்வி எழுப்பினர். இதுதொடர்பாக, அரசு தலைமை குற்றவியல் வழக்கறிஞரின் கருத்தையும் நீதிபதிகள் கோரினர்.இதையடுத்து, தலைமை குற்றவியல் வழக்கறிஞர் ஹசன் முகமது ஜின்னா, நீதிபதிகள் முன் ஆஜரானார். இடைக்கால ஜாமின் வழங்க, நீதிமன்றத்துக்கு அதிகாரம் உள்ளதாகவும், வழக்கை பொறுத்து இது மாறுபடும் எனவும், தலைமை குற்றவியல் வழக்கறிஞர் தெரிவித்தார். தண்டனை கைதி என்றால், பரோல் வழங்க, அரசுக்கு அதிகாரம் இருப்பதாகவும் தெரிவித்தார்.

அப்போது நீதிபதிகள் கூறியதாவது:

தேவையின்றி குண்டர் தடுப்பு சட்டத்தை பிரயோகிக்கக் கூடாது. குறிப்பிட்ட எல்லைக்குள் சம்பந்தப்பட்ட நபர் இருக்கும்படி கட்டுப்படுத்தலாம். அதை மீறினால் உரிய நடவடிக்கை எடுக்கலாம். ஒரு வழக்கு இருந்தால் கூட, அவருக்கு எதிராக குண்டர் சட்டம் பிரயோகிக்கப்படுகிறது; தேவையின்றி கைது செய்யப்படுபவருக்கு, இழப்பீடு வழங்க உத்தரவிடலாமா?

இவ்வாறு நீதிபதிகள் கேள்வி எழுப்பினர்.

அதைத்தொடர்ந்து, தேவையின்றி, இந்தச் சட்டத்தை பயன்படுத்தக் கூடாது என, டி.ஜி.பி.,க்கு கடிதம் எழுதியிருப்பதாகவும், அதனால், தற்போது கைது எண்ணிக்கை குறைந்திருப்பதாகவும், தலைமை குற்றவியல் வழக்கறிஞர் தெரிவித்தார்.

அதிகாரிகளின் வாகனங்களில் கருப்பு பிலிம்களை அகற்றும்படி நீதிமன்றம் உத்தரவிட்டும், சிலர் அதை நிறைவேற்றவில்லை. போலீஸ் நிலையங்களுக்கு செல்ல, மக்கள் அச்சப்படுகின்றனர்; புகார் அளிக்க வருபவர்களிடம் போலீசார் முறையாக நடந்து கொள்ள வேண்டும்; மரியாதையுடன் நடத்த வேண்டும். போலீஸ் துறையில் சீர்திருத்தம் வேண்டும்' எனவும் நீதிபதிகள் தெரிவித்தனர்.

# தேனி மாவட்டத்தில் கல்வி சேவையாற்றி வரும் நல்லி மெட்ரிகுலேஷன் பள்ளிக்கு வலுசேர்க்கும் வர்த்தனாவின் பள்ளிக்கான நிதியுதவி

சென்னை, 21 ஆகஸ்ட் 2024: மிதமான கல்வி கட்டணத்துடன் இயங்கும் கல்வித் துறையில் முனைப்புடன் செயல்பட்டு வரும், ஒரு வங்கி சாரா நிதி நிறுவனமான வர்த்தனா, தமிழ்நாட்டின் தேனி மாவட்டத்தில் மக்களின் நம்பிக்கையோடு செயல்பட்டு வரும் நல்லி மெட்ரிகுலேஷன் பள்ளியின் வளர்ச்சிக்கு நிதி உதவியை வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறது. திரு. எஸ். ராமர் என்ற தொலைநோக்கு சிந்தனையாளரால் நிறுவப்பட்ட நல்லி, அம்மாவட்டத்தில் வசிக்கும் மாணவர்களுக்கு சிறப்பான கல்வியை மிதமான கட்டணத்தில் வழங்குவதை இலக்காகக் கொண்டு இயங்கி வருகிறது.

நிதி நிறுவனமான வர்த்தனா வழங்கிய பள்ளிகளுக்கான கடன் உதவி திட்டத்தின் ஆதரவோடு, நல்லி மெட்ரிகுலேஷன் பள்ளியில் வகுப்பறைகள் புதுப்பிக்கப்பட்டிருக்கின்றன மற்றும் இதர வசதிகளின் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. பள்ளியின் நிர்வாகம் மற்றும் செயல்பாடுகளை மேம்படுத்துவது குறித்து திரு. எஸ். ராமர் அவர்களுக்கு வர்த்தனா வழிகாட்டியுள்ளது. வர்த்தனாவின் இந்த நிதியுதவி கற்றல் சூழலை மேம்படுத்தியது மட்டுமின்றி தேனி மாவட்டத்தில் அதிகமான குழந்தைகளுக்கு கல்வியை மிதமான கட்டணத்தில் பயில்வதற்கான அணுகலை வழங்கியுள்ளது.

வர்த்தனா நிதி நிறுவனத்தின் தலைமை செயல் அலுவலராக திரு. ஸ்டீவ் ஹர்டுகிரேவ், இப்பள்ளியின் சிறப்பான வெற்றி குறித்து கருத்து தெரிவிக்கையில், "பின்புலம் எதுவாக இருப்பினும், ஒவ்வொரு குழந்தையும் தரமான கல்வியைப் பெறுவதற்கான அணுகுவசதியை கொண்டிருக்க வேண்டும் என்று வர்த்தனாவில் நாங்கள் நம்புகிறோம். நல்லி மெட்ரிகுலேஷன் பள்ளியில் நல்ல மாற்றங்களைக் கண்டு நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம், இது திரு. எஸ். ராமர் அவர்களின் அர்ப்பணிப்பு மற்றும் கடின உழைப்புக்குச் சான்றாகும். இப்பள்ளியின் மாணவர்களின் கற்றல் சூழலை மேம்படுத்துவதற்கு தேவையான நிதியுதவியை வழங்குவதன் மூலம் பள்ளிக்கு ஆதரவளிப்பதில் நாங்கள் பெருமைப்படுகிறோம்," என்று கூறினார்.

நல்லி மெட்ரிகுலேஷன் பள்ளியின் நிறுவனர் திரு. எஸ். ராமர் வர்த்தனா நிதி நிறுவனத்திற்கு தனது நன்றியுணர்வை வெளிப்படுத்திக் கூறியதாவது: "பள்ளியை சீர்படுத்தி புதுப்பிப்பதற்கான எமது பயணத்தில் வர்த்தனா வழங்கியிருக்கும் ஆதரவு மிக முக்கியமானதாக இருந்திருக்கிறது. வர்த்தனா வழங்கிய ஆதரவின் காரணமாக, பள்ளியின் தரம் மற்றும் நற்பெயர் மீது நல்ல தாக்கம் ஏற்பட்டிருப்பதை நாங்கள் கண்டிருக்கிறோம். தரம் உயர்த்தப்பட்ட வகுப்பறைகள், சீர்படுத்தப்பட்ட வசதிகள் ஆகியவற்றினால் கல்வி கற்பதற்கு மிகவும் உகந்த சூழலை எமது மாணவர்களுக்கு இப்போது எங்களால் வழங்க முடிகிறது. ஒவ்வொரு ஆண்டும் இங்கு பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையை தொடர்ந்து தக்கவைப்பதற்கும் மற்றும் அதிகரிப்பதற்கும் ஒரு முக்கியமான காரணமாக வர்த்தனாவின் நிதியுதவி இருந்திருக்கிறது. இந்த சிறப்பான நிலை, மாணவர்களுக்கு கல்வி சார்ந்த பல வாய்ப்புகளை வழங்கியிருக்கிறது. அனைவருக்கும் தரமான கல்வியை வழங்கும் எமது செயல்திட்டத்தை தொடர்ந்து முனைப்புடன் மேற்கொள்வதில் நாங்கள் எங்களை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறோம்."

2021-ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசிடமிருந்து நல்லாசிரியர் விருதை திரு. எஸ். ராமர் பெற்றிருக்கிறார். சின்னமனூர் வட்டாரத்திற்கு வழிகாட்டும் ஒருங்கிணைப்பு அலுவலராக அவர் தேர்வு செய்யப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. நல்லி மெட்ரிகுலேஷன் பள்ளியின் மேம்பாடு மற்றும் அதன் முன்னேற்றங்கள், அனைத்துக் குழந்தைகளுக்கும் தரமான கல்வியை மிதமான கட்டணத்தில் ஆதரிப்பதில் வர்தனாவின் அர்ப்பணிப்பை பிரதிபலிக்கிறது. புதுமையான நடவடிக்கைகளை கடைப்பிடிப்பதன் வழியாக, மொழித்திறன்களை மேம்படுத்துவது மீது சிறப்பு கவனம் செலுத்துவதற்கு மாணவர்களை ஆர்வத்துடன் ஈடுபடுத்தும் ஒரு சிறந்த வழிமுறையை இப்பள்ளி பின்பற்றுகிறது. பள்ளியை சிறப்பாக நடத்துவதற்கு அத்தியாவசியமான நிதி ஆதரவை வழங்குவதன் மூலம் சமூகங்களில் சிறப்பான மாற்றத்தை உருவாக்குவதற்காக தங்களை அர்ப்பணித்துக் கொண்டிருக்கின்ற திரு. எஸ். ராமர் போன்ற நல்ல மாற்றத்தை உருவாக்கும் சாதனையாளர்களுக்கு வர்த்தனா திறனதிகாரத்தை வழங்குகிறது. நல்லி மெட்ரிகுலேஷன் பள்ளியில் மேம்படுத்தப்பட்டிருக்கும் கற்றல் சூழலமைப்பு, தொலைநோக்குப் பார்வை கொண்ட கல்வியாளர்களும் மற்றும் ஆதரவளிக்கின்ற நிதி வழங்குனர்களும் பகிரப்பட்ட ஒரே இலக்கை அடைவதற்காக ஒத்துழைப்பின்போது சிறப்பான சாதனைகள் நிச்சயம் சாத்தியமானவை என்பதை எடுத்துக்காட்டுகிறது.

இந்தியாவெங்கிலும் கல்வியின் தரங்களை உயர்த்துவது மீது பேரார்வம் கொண்டிருக்கின்ற நபர்களையும், பள்ளிகளையும் அடையாளம் கண்டு ஆதரிப்பது மற்றும் நல்ல தாக்கத்தை ஏற்படுத்தும் கூட்டாண்மைகளை பேணி வளர்ப்பது என்ற குறிக்கோள்கள் மீது வர்த்தனா தொடர்ந்து வலுவான பொறுப்புறுதியைக் கொண்டிருக்கிறது. நிலையான முயற்சிகள் மற்றும் புத்தாக்கமான நிதிசார் தீர்வுகள் வழியாக நமது நாட்டில் கல்விசார் சூழலமைப்பை மேம்படுத்தி முன்னேற்றும் பணியை வர்த்தனா தொடர்ந்து மேற்கொள்ளும். அத்துடன், இந்நாட்டில் ஒவ்வொரு குழந்தைக்கும் தரமான கல்வி அணுகிப் பெறக்கூடியதாக இருப்பதை வர்த்தனா உறுதி செய்யும்.

# 'தமிழக வெற்றிக் கழகம்' - கட்சியின் கொடியை நாளை நடிகர் விஜய் அறிமுகப்படுத்துகிறார்

சென்னை, 21 ஆகஸ்ட் 2024: தமிழக வெற்றிக் கழகத்தின் கொடியை அக்கட்சியின் தலைவர் நடிகர் விஜய் நாளை (22ந் தேதி) அறிமுகம் செய்கிறார்.

நடிகர் விஜய் 'தமிழக வெற்றிக் கழகம்' என்று புதிய கட்சியை தொடங்கிய அறிவிப்பை கடந்த பிப்ரவரி மாதம் 2-ம் தேதி அதிகாரபூர்வமாக அறிவித்தார். வரும் 2026ம் ஆண்டு தமிழக சட்டசபை தேர்தலில் போட்டியிடுவதாக அவர் அறிவித்துள்ளார். இந்நிலையில், கட்சியின் கொடியை நாளை (வியாழக்கிழமை) அறிமுகம் செய்கிறார்.



சென்னை பனையூரில் நடைபெறும் விழாவிற்கு கட்சியின் முக்கிய நிர்வாகிகளுக்கு மட்டுமே அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. கட்சியின் கொடி எந்த நிறத்தில் இருக்கும் என்று தொண்டர்கள் மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

கட்சியின் முதல் மாநாட்டை விக்கிரவாண்டியில் நடத்த கட்சி தலைமை திட்டமிட்டுள்ளது.

இதற்கிடையில், நேற்று முன்தினம் மஞ்சள் நிறத்துடன் நடுவில் விஜய் படம் இருப்பது போன்ற கட்சிக்கொடி, பனையூரில் கட்சி அலுவலகத்தில் நடப்பட்டுள்ள 45 அடி உயர கொடி கம்பத்தில் ஏற்றி ஒத்திகை பார்க்கப்பட்டது.

இதுதான் தமிழக வெற்றிக் கழகத்தின் கொடியா? என்று தெரியாத நிலையில் இந்த வீடியோ இணையத்தில் வேகமாக பரவி வருகிறது.



## இந்திய ராணுவத்துடன் இணைந்து ஹிந்துஜா அறக்கட்டளை ஆனது வெலிங்டன் பசுமை பூங்காவின் ஹன்னிகல்லு மார்ஷை முதன்மை சி எஸ் ஆர் செயல்பாடான ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் புதுப்பிக்கிறது

சென்னை, 21 ஆகஸ்ட் 2024: நீர் புதுப்பிப்பை ஊக்குவிப்பதை நோக்கமாக் கொண்ட ஒரு செயல்பாடாக, 110 ஆண்டுகள் பழமையான இந்துஜா குழுமத்தின் முதன்மை சேவை நிறுவனமான இந்துஜா அறக்கட்டளை (எச் எஃப்) ஆனது வெலிங்டனில் உள்ள நன்னீர் சதுப்பு நிலமான ஹன்னிகல்லு சதுப்பு நிலத்தை மீட்டெடுத்து புத்துயிர் ஊட்டுகிறது. 12 ஏக்கருக்கு மேல் பரந்து விரிந்துள்ள இந்தத் திட்டத்தை, இந்திய ராணுவத்தின் சென்னை ரெஜிமென்ட் மையம் (எம்ஆர்சி) மூலம் இணைந்து செயல்படுத்தப்பட்டது. சென்னை ரெஜிமெண்ட் மையமானது இந்தியாவின் மிகப் பழமையான இராணுவப் படைப்பிரிவு மற்றும் வெலிங்டனின் ஸ்டேஷன் எச் கியூ என்பது குறிப்பிடத்தக்கது. அதோடு, இந்த செயல்பாடானது இந்துஜா அறக்கட்டளையின் சி எஸ் ஆர் திட்டத்தின் ஜல் ஜீவன் கீழ் மேற்கொள்ளப்படுகிறது.

இந்துஜா அறக்கட்டளையின் தலைவர் திரு.பால் ஆபிரகாம் மற்றும் எம்.ஆர்.சி.யின் கமாண்டன்ட் பிரிகேடியர் எஸ்.கே.யாதவ் ஆகியோரால் புனரமைக்கப்பட்ட சுற்றுச்சூழல் சார் பசுமை பூங்கா ஆனது திறந்து வைக்கப்பட்டது.

ஹன்னிகல்லு மார்ஷ் அதிக பாதுகாப்புக்கான மதிப்பைக் கொண்டுள்ளது. கடந்த பல ஆண்டுகளாக, இந்த சதுப்பு நிலத்தில் குப்பை கொட்டுதல், ஆக்கிரமிப்பு மற்றும் கழிவுநீரை கலத்தல் ஆகியவற்றின் மூலம் வரலாற்று கையாளுதல் மற்றும் மனித தலையீட்டால் பெரும் பாதிப்புக்கு உட்பட்டது. மறுசீரமைப்பிற்குப் பிறகு, முழு அமைப்பும் இப்போது தண்ணீரைப் பெறுகிறது. ஆழமற்ற மற்றும் ஆழமான நிலத்தடி நீர்நிலைகளை ரீசார்ஜ் செய்து, சில அளவுகளை வெளியேற்றுகிறது. இதன் விளைவாக குறைந்த ஆவியாதல் இழப்பு ஏற்படுகிறது. அதோடு, 25கே+ குடியிருப்பாளர்கள் பயனடைகிறார்கள்.

இந்த முயற்சி வெற்றிகரமாக நடந்து முடிந்ததா என்பதை உறுதி செய்வதற்காக விரிவான மறுசீரமைப்பு முயற்சிகள், துல்லியமான திட்டமிடல் தேவைப்பட்டன. அதன்படி, 33,167 சதுர மீட்டரில் இருந்து ஈர நிலத்தை கடுமையாக பாதிக்கும் வேற்றுகிரக தாவர இனங்களை கண்டறிந்து அகற்றும் திட்ட என் ஜி ஓ பங்காளியான கேர் எர்த் டிரஸ்ட் மூலம் பல்லுயிர் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. தவிர, ஆரோக்கியமான தாவரங்களை விதைப்பதன் மூலமும், வனவிலங்குகளுக்கான தீவுகளை உருவாக்குவதன் மூலமும் இப்பகுதி பின்னர் மீட்டெடுக்கப்பட்டது.

இந்த முயற்சியின் கீழ், ஹன்னிகல்லு சதுப்பு நிலத்திற்கு நன்னீர் ஊட்டும் பத்து மலை நீரூற்றுகள் மீட்டெடுக்கப்பட்டன. 1.5 கிமீ நீளமுள்ள புற நடைபாதை சாலையின் மேல்புறமாக உருவாக்கப்பட்டது. 2,000 கன மீட்டர் மண் தோண்டி, தடுப்பு அணை கட்டப்பட்டது. இந்த மறுசீரமைப்புக்கு இந்துஜா குழுமத்தின் முதன்மை நிறுவனமான அசோக் லேலண்ட் நிதியளித்தது.

இந்த முயற்சி குறித்து கருத்து தெரிவித்த இந்துஜா அறக்கட்டளையின் தலைவர் பால் ஆபிரகாம், “தண்ணீர் தட்டுப்பாடு இந்தியா முழுவதும் அதிகரித்து வருகிறது. இந்தியாவின் 1.3 பில்லியன் மக்கள்தொகையினருக்கு, அதாவது குறைந்தது 40% பேருக்கு 2030க்குள் குடிநீர் இல்லாத சூழல் உருவாகும் என்று இந்திய அரசாங்க குறிப்பேடு கூறுகிறது. ஒவ்வொரு துளியையும் காப்பாற்ற வேண்டும். தண்ணீரை பாதுகாப்பது ஹிந்துஜா அறக்கட்டளையின் முதன்மையான காரணம்.

மெட்ராஸ் ரெஜிமென்ட் சென்டரின் கமாண்டன்ட் பிரிகேடியர் எஸ்.கே.யாதவ் கூறியதாவது: “இந்த திட்டம் பிரதமர் நரேந்திர மோடியின் அமிர்த சரோவர் திட்டத்தின் ஒரு பகுதியாக ஒவ்வொரு மாவட்டத்திலும் 75 நீர்நிலைகளை மீட்டெடுக்கிறது. இன்று நீங்கள் பார்க்கும் பசுமை பூங்கா, ஒரு காலத்தில் வற்றாத நீரோடைகளைக் கொண்ட இயற்கையான நீர்நிலையாக இருந்தது, பிரிட்டிஷ் காலத்தில் இருந்து நீர் புள்ளியாக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. காலப்போக்கில் அது பாழ்நிலமாக மாறியது. இந்துஜா அறக்கட்டளை தன்னார்வமாக முன்வந்து, மற்ற பங்குதாரர்களின் விலைமதிப்பற்ற ஆதரவு உட்பட கூட்டு முயற்சிகள் மூலம், இந்த பகுதியை ஒரு செழிப்பான சுற்றுச்சூழல் பூங்காவாக மாற்றியுள்ளோம், இது நமது இயற்கை வளங்களை புத்துயிர் பெறுவதற்கான அர்ப்பணிப்பை குறிக்கிறது." என்றார்.

நிறுவனத்தின் சி எஸ் ஆர் செயல்பாட்டின் முதன்மையான ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ், இந்துஜா அறக்கட்டளை கடந்த 5 ஆண்டுகளில் இந்தியாவில் உள்ள 1110 கிராமங்களில் 4 மில்லியனுக்கும் அதிகமான உயிர்களை பாதுகாத்துள்ளது. பல நீர் பாதுகாப்பு முயற்சிகளில், அறக்கட்டளையானது 3.8 மில்லியன் தண்ணீர் டேங்கர்களுக்கு சமமான நிலத்தடி நீரை ரீசார்ஜ் செய்வதையும், 31 மில்லியன் ஜெர்ரி கேன்களுக்கு சமமான பாதுகாப்பான குடிநீரை வழங்குவதையும் செயல்படுத்தியது.

எச் எஃப் குழு நிறுவனங்களுடன் இணைந்து நாடு முழுவதும் 56 ஏரிகள் உட்பட ஏராளமான நீர்நிலைகளை மீட்டெடுத்துள்ளது. இந்த மறுசீரமைப்பு திட்டங்களில் அகமதாபாத்தில் உள்ள மகர்பா தொட்டி, ஜோத்பூரில் உள்ள நவலகா பாவ்ரி, ஆல்வார் ராஜஸ்தானில் உள்ள ராணி மூசி சாகர் மற்றும் என் டி-ல் உள்ள ஹவுஸ் ஷம்ஷி போன்ற பாரம்பரிய கிணறுகள் அடங்கும்.

## ஒரு சாம்பியனைப் போல ரீசார்ஜ் செய்து கொள்ளுங்கள்: கோகோ கோலா, லிம்கா குளுக்கோசார்ஜ்-ஐ அறிமுகப்படுத்துகிறது




சென்னை, 21 ஆகஸ்ட் 2024: கோகோ-கோலா நிறுவனம், குளுக்கோஸ் மற்றும் எலக்ட்ரோலைட் குளிர்பானத்திற்கான ஒரு புதிய பிராண்ட் அடையாளமாக, முற்றிலும் புத்தம் புதிய லிம்கா குளுக்கோசார்ஜ்-ஐ அதன் சொந்த உள்ளூர் பிராண்டான லிம்கா-வின் கீழ் எளிதில் வாங்கும் விலையில் அறிமுகப்படுத்துகிறது. லிம்கா குளுக்கோசார்ஜ்-ஆனது, குளுக்கோஸ் மற்றும் எலக்ட்ரோலைட்டுகளின் ஒப்பற்ற கலவையுடன், விரைவான ரீஹைட்ரேஷன் மற்றும் ஆற்றலுக்கான ஒரு குளிர்பானமாகும். இது மைதானத்தில் விளையாடும் போதும், மற்றும் அன்றாட வியர்வை சிந்தும் தருணங்களுக்கும் சிறந்தது மற்றும் சுறுசுறுப்பான வாழ்க்கையை முன்னெடுப்பவர்களுக்கு ஆற்றலை மீட்டெடுப்பதில் ஏற்படும் சவால்களுக்கு ஏற்றது. லிம்கா குளுக்கோசார்ஜ்-ஆனது, ஒலிம்பிக்ஸ் போட்டியின் போது, ஒரு சாம்பியன் பட்டாளமான நீரஜ் சோப்ரா, ஆண்கள் இந்திய ஹாக்கி அணி, சாத்விக்சாய்ராஜ் ரங்கிரெட்டி மற்றும் சிராக் ஷெட்டி ஆகியோருடன் இணைந்து அறிமுகப்படுத்தப்பட்டது. ஒரு தொடர் பிராண்ட் படங்களான, தி கோல்டன் பாய் வித் 'சில்வர்' லைனிங் (இணைப்பு)-ஐ ஆதரிக்கவும், தி டைனமிக் டுஓ (இணைப்பு)-க்கு தன் மேம்பாடு அளிப்பதற்கும், சக்திவாய்ந்த ஹாக்கி அணி மற்றும் அதன் ஹீரோக்களுக்கும் ஆதரவளிப்பதற்கும் (இணைப்பு) ஆகியவற்றின் மூலம் இந்த பிராண்ட் தனது அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியது.

ஒலிம்பிக் போட்டிகள் பாரிஸ் 2024-இன் அதிகாரப்பூர்வ ஹைட்ரேஷன் பங்காளியாக இருப்பதால், இந்த புத்துணர்ச்சியூட்டும் மற்றும் ஆற்றலூட்டும் குளிர்பானம் சாம்பியன்களின் ஆகச்சிறந்ததை வெளிக்கொணர்வதில் அவர்களுக்கு ஆதரவளித்தது. இந்த மாபெரும் சர்வதேச பல்வகை விளையாட்டு நிகழ்வானது முடிவடையும் போது, விளையாட்டு வீரர்களின் குறிப்பிடத்தக்க விடாமுயற்சிகளுக்காக இந்த பிராண்ட்-ஆனது அவர்களுக்கு தலைவணங்குகிகிறது.

விளையாட்டு, பயணம், உடற்பயிற்சி மற்றும் தீவிர வேலைப்பளு போன்ற உடல் செயல்பாடுகளின் போது, இந்த வாட்டர்-பேஸ்டு, நோ-ஃபிஸ் குளிர்பானமானது விரைவாக ரீஹைட்ரேஷன் செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. புத்துணர்ச்சியூட்டும் அசல் எலுமிச்சை சாற்றுடன் உட்செலுத்தப்பட்ட லிம்கா குளுக்கோசார்ஜ்-ஆனது, செயல்பாட்டு நன்மைகளை மட்டுமல்லாமல், உங்களுக்கு உடனடியாக புத்துயிர் அளிக்கும் சிறந்த சுவையையும் வழங்குகிறது.

இந்தியா மற்றும் தென்மேற்கு ஆசியாவின் ஹைட்ரேஷன், ஸ்போர்ட்ஸ் மற்றும் டீ - மார்கெட்டிங் பிரிவின் மூத்த இயக்குனர் ருசிரா பட்டாச்சார்யா கூறுகையில், “லிம்கா குளுக்கோசார்ஜ் மூலம், நாங்கள் சாம்பியன்களை, அவர்களின் தீவிர விடாமுயற்சிகளின் ஆற்றலுக்கு இணையாக, களத்திற்கு வெளியேயும் வெளியேயும் ஊக்கப்படுத்துகிறோம், . பாரிஸ் 2024 ஒலிம்பிக் போட்டிகளுக்கான எங்கள் ஹீரோக்களை ஆதரித்ததில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம். இது உத்வேகமான தனிச்சிறப்புக்கும் மற்றும் எங்கள் விளையாட்டு வீரர்களின் விடாமுயற்சியை அங்கீகரிப்பதில் எங்கள் உறுதிப்பாட்டையும் பிரதிபலிக்கிறது." என்றார்.

லிம்கா குளுக்கோசார்ஜ்-இன் அறிமுகத்துடன், நமது ஒலிம்பிக் பிரச்சாரத்தின் பெருமை மற்றும் கெளரவத்தின் அடையாளமும் வருகிறது. பேட்மிண்டனில் சிராக் & சாத்விக், ஈட்டி எறிதலில் நீரஜ் சோப்ரா மற்றும் இந்திய ஹாக்கி ஃபெடரேஷன் ஆகியவை இந்த பிராண்டின் முக்கிய வெற்றிகளாகும். விளையாட்டு சூழலை ஆதரிக்க கார்ப்பரேட் இந்தியா எதைப் பற்றி ஆலோசனை செய்ய வேண்டும் என்பதற்கு இது போன்ற கூட்டுக்குழுக்கள் சான்றுகளாகும் மற்றும் எல் ஏ 2028-க்கான பயணம் எங்களுக்கு இன்னும் பலமாக இருக்கும்- நம்ரதா பரேக், இயக்குனர் & இணை நிறுவனர் | மெராக்கி ஸ்போர்ட்ஸ்& எண்டர்டெயின்மென்ட்

லிம்கா குளுக்கோசார்ஜ்-ஆனது, சுவை மற்றும் செயல்பாட்டு நன்மைகள் ஆகிய இரண்டையும் பூர்த்தி செய்யும் #பிவரேஜஸ் பார் லைப் என்ற பரந்த அளவிலான குளிர்பானத் தேர்வுகளை வழங்குவதற்கான கோகோ கோலா நிறுவனத்தின் தொன்றுதொட்டுவரும் உறுதிப்பாட்டின் ஒரு பகுதியாகும். இந்த புத்தாக்கமானது, நுகர்வோருக்கு சிறந்த சுவையை மட்டுமல்லாமல், அவர்களின் ஹைட்ரேஷன் மற்றும் மீளுட்டத் தேவைகளையும் பூர்த்தி செய்யும் குளிர்பானங்களை வழங்குவதற்கான இந்நிறுவனத்தின் விடாமுயற்சியையும் பிரதிபலிக்கிறது.

## தென்னிந்திய திரைப்பட எழுத்தாளர்கள் சங்கம் 21-வது பொதுக்குழு கூட்டம்



சென்னை, 21 ஆகஸ்ட் 2024: தென்னிந்திய திரைப்பட எழுத்தாளர்கள் சங்கத்தின் மூத்த எழுத்தாளர் திரு.காரைக்குடி நாராயணன் அவர்களுக்கு, எழுத்தாளர் சங்கத்தில் இருநூற்றி மூன்று (203) கதைகளை பதிவு செய்து சாதனை படைத்தமைக்குப் பாராட்டு விழா நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து அச்சங்கத்தின் 21வது பொதுக்குழு கூட்டமும் நடைபெற்றது.

## சௌத் இண்டியன் சினி, டெலிவிஷன் ஆர்ட்டிஸ்ட்ஸ் அண்டு டப்பிங் ஆர்ட்டிஸ்ட்ஸ் சங்க அலுவலக கட்டிடம் திறப்பு விழா



சென்னை, 21 ஆகஸ்ட் 2024: சௌத் இண்டியன் சினி, டெலிவிஷன் ஆர்ட்டிஸ்ட்ஸ் அண்டு டப்பிங் ஆர்ட்டிஸ்ட்ஸ் சங்க அலுவலக கட்டிடத்தை, இன்று ஆகஸ்ட் 21 (புதன்) 2024, தலைவர் டத்தோ ராதாரவி திறந்து வைத்தார்.

பெப்சி தலைவர் ஆர்.கே. செல்வமணி தலைமையில், பெப்சி பொதுசெயலாளர் பி.என். சுவாமிநாதன், பெப்சி பொருளாளர் செந்தில்குமார் மற்றும் அனைத்து சங்க நிர்வாகிகள் முன்னிலையில் திறப்பு விழா நடைபெற்றது.